07.03.2024

OS.No.288/2022

PW1- திருமலைபாண்டி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.03.2024.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. எந்த ஊரில் இருந்து வருகிறீர்கள் என்றால் குறும்பலாபேரி. என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பூர்வீக சொத்துஎ னக்கு வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்க்ல செய்துள்ளேன். பிராதுதபசில் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.368.**(சாட்சி தற்போது பட்டா எண் தான் 368 என்றும், சொத்தின் சர்வே எண் 622 என்றும் கூறுகிறார்.)**

2. பிராதுதபசில் சொத்தின் உட்பிரிவு என்ன என்றால் 8 ஏ. பிராதுதபசில் சொத்திற்கு கிழக்கே யாருடைய இடம் உள்ளது என்றால் ஹரிஹரசுதன் வீடு உள்ளது. உங்களது தகப்பனாருக்கு பிராதுதபசில் சொத்தின்விவரமே தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் கிழக்கே பால்நாடார் மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் ஹரிஹரசுதன் தற்போது கிரையம் வாங்கியுள்ளார்.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பிராதுதபசில் சொத்து மற்றும் அதன் அருகிலுள்ள சொத்திற்கான வில்லங்கசான்று என்றால் சரிதான். **(சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்ட வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்கசான்று பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. )**

ஒம்/-கே.பாஸ்கர்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

தென்காசி